கவிமுளரி

கவிதைகளின் வாசகம்

கால்கோள் : 2023

மாதாந்த மின்னிதழ்

25 ஜூன் 2024

முளரி 2

இதழ் 6



விபுலானந்தர் கலை இலக்கிய மன்றம்

கவி முளரி ®

மாதாந்த மின்னிதழ்

கவிதைகளின் வாசகம்

காலகோள் : 2023

ISSN 3021-6680

Kavi Mulari Magazine

வெளியிடுவோர் :

விபுலானந்தர் கலை இலக்கிய மன்றம்,
பேத்தாழை, வாழைச்சேனை.

பதிவு இல: EP/CUL/BAT/VAL/03/69/2023

புதிய ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.

படைப்புகளை அனுப்புவோர் கவனிக்க வேண்டியவை :

- கவிதைகள் மட்டுமே அனுப்பலாம்.
- ஒருங்குறியில் (Unicode font) தட்டச்சு செய்து அனுப்ப வேண்டும்.
- படைப்பாளர், படைப்பின் கீழ் தமிழில் பெயரையும் வசிப்பிடத்தையும் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.
- ஆக்கம் தனது சொந்தப் படைப்பு என்பதை உறுதிசெய்தல் அவசியம்.
- ஒவ்வொரு மாதமும் 15 ஆம் தேதிக்குள் ஆக்கங்கள் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
- ஒருவர் எத்தனை ஆக்கங்களும் அனுப்பலாம்.
- ஆக்கங்கள் அடுத்தடுத்த இதழ்களில் பிரசுரிக்கப்படும்.
- மின்னஞ்சலுக்கு அனுப்பப்படும் ஆக்கங்களே இதழுக்கு ஏற்கப்படும்.

. . . .

ஆக்கங்களை அனுப்ப

editor2023kavimulari@gmail.com

வாசிப்பு அனுபவத்திற்கு நுழையுங்கள்...

https://www.facebook.com/profile.php?id=61552005633300
https://facebook.com/groups/818237263429433/
https://kavimulari.blogspot.com

"எழுதுகோல் புரட்சி
எங்ஙனும் எழும்பட்டும்
விழுதென விடுதலை
சமூகத்தில் நிலைக்கட்டும்"

நற்கவிகளுக்கு
வணக்கம்,

வாழைச்சேனை பேத்தாழையைத் தளமாகக் கொண்டு இயங்கும் விபுலானந்தர் கலை இலக்கிய மன்றத்தின் முயற்சியாகக் 'கவிமுளரி' எனும் கவிதைசார் மின்னிதழ் வெளிவருகிறது.


பிரதேச கவிஞர்களுக்குக் களம் கொடுப்பதும் அவர்களின் எழுத்தாக்க முயற்சிகளுக்குக் கரம் கொடுப்பதும் எமது பிரதான அவா.

தொடர்ந்து,
8 இதழ்கள் வெளிவந்தன. அதற்கு நீங்கள் வழங்கிய ஆதரவிற்கு மேலான நன்றி. தொடர்ந்தும் ஆதரவளிப் -பீர்கள் என நம்புகின்றோம்.

இதழில் பங்குபெறும்
கவிஞர்கள் யாவர்க்கும்
வாழ்த்துகள்.

சிலரது கவிதைகள் இடம்பெறாமல் போயிருக்கலாம். அவர்களது கவிதைகள் தொடர்ந்து வரும் இதழ்களில் நிச்சயம் வெளிவரும்.

தொடர்ந்தும் உங்கள்
பேராதரவை வேண்டும்,




உங்கள்,
-இதழாசிரியர்

2024.06.25

முளரியின் இதழில்...

- கவிஞர் கவித்தோழி சிவநந்தினி
- கவிஞர் தமிழ்மகள் சதுர்த்தி
- வளர்கவி க.யுவக்ஷனா
- கவிஞர் இரவிகாந்தன்
- கவிஞர் மருதமூர் ஜிதர்சினி
- வளர்கவி வாழையூர் அபி
- கவிஞர் வி.அபிவர்ணா
- கவிஞர் தமிழூராள் அனுஷ்திக்கா
- கவிஞர் பிள்ளைக்கவி பிரசாந்
- கவிஞர் இரா.நிதன்
- கவிஞர் கோகிலா சிவராமன்
- கவிஞர் மாலதி இராமலிங்கம்
- கவிஞர் இ.சோபிகா
- கவிஞர் ஷாய் டிலக்ஷி
- பாவலர் வேங்கை மார்பன்
- கவிஞர் சிவமதுரா நித்தியானந்தம்
- கவிஞர் மறத்தமிழன் கலை
- கவிஞர் க.இரவிச்சந்திரன்
- கவிஞர் ரா.பிரேம் சுரேஷ்
- கவிஞர் தமிழாதினி கிந்துயா
- கவிஞர் திருமதி பிரிந்தா புஷ்பாகரன்



-தமிழ்த்தாய் வாழ்த்து-

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகுஞ்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலுந் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமு மதிற்சிறந்த திராவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோ லனைத்துலகு மின்பமுற
எத்திசையும் புகழ்மணக்க விருந்தபெருந் தமிழணங்கே, (௧)

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் னிருந்தபடி யிருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்குங் கவின்மலையாளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே யொன்றுபல வாயிடினும்
ஆரியம்போ லுலகவழக் கழிந்தொழிந்துசிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே. (௨)

~மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை.



இயற்கை

(குறள்வெண்செந்துறை)

இயற்கை அழகி இல்லம் அடைந்திட
தயக்கம் இல்லாத் தண்மை சூழுமே.

மழையின் களிப்பில் முளைத்த வித்துகள்
குழைந்த நெஞ்சில் குதூகலம் ஏவுமே.

வண்ண அணிகலன் வழங்கா மகிழ்வைத்
திண்ணமாய் வனங்கள் தினமும் வழங்குமே.

திண்ணைச் செடியும் திரண்ட மனதின்
கண்ணைக் கவர்ந்து காதல் பேசுமே.

இன்பம் என்றும் இயற்கை ஒன்றே
அன்பின் பிறப்பிடம் அதுவெனத் தெளியே.

-கவித்தோழி சிவநந்தினி
வாழைச்சேனை.

அடிமைக் காலம்

ஆறடி மனிதரை ஆறு அங்குலத்துள்
அடக்கிவைத்த காலம் இது

ஓடி ஆடி திரிந்தவரை ஒரு மூலையில்
ஒடுக்கிவைத்த காலம் இது

சுற்றித் திரிந்தவரைச் சோம்பேறியாய்
மாற்றிவைத்த காலம் இது

சிறகடிக்கும் நேரமதை சிறைப் பிடித்து
சிக்கவைத்த காலம் இது

சிந்திக்கும் திறனைத் திசை மாற்றி
சிதறவைக்கும் காலம் இது



முகமெதிர் உறவுகளின் நேசங்களை
மறக்கவைத்த காலம் இது

முகமறியா நபரை எல்லாம் முகநூலில்
தேடி உலவும் காலம் இது

கூடிப்பேசும் குரலை எல்லாம் அழைப்பினூடு
கேட்கவைத்த காலம் இது

காலம் மறந்த கைபேசி அடிமைகளின்
கானலாய்ப் போன காலம் இது.

-தமிழ்மகள் சதுர்த்தி
வாழைச்சேனை.

பள்ளி நாட்களில்...

கலையாத் தூக்கத்துடன் தொடங்கும்
காலைக்கூடமும்
புதிய ஆலோசனையுடன் முடியும்
ஆசிரிய அறிவுரையும்
ஆர்ப்பரிப்புடன் ஆரம்பமாகும்
முதலாம் பாடவேளையும்
ஓய்வின்றியே ஓடி முடியும்
ஓய்வுநேர இடைவேளையும்
ஆரவாரத்துடன் தொடங்கும்
ஆறாம் பாடவேளையும்
ஆசையோடு எட்டிப் பார்க்கும்
எட்டாம் பாடவேளையும்
இறுதியாக இடம்பெறும்
இறை வணக்கமும்
தாய்மொழி வாழ்த்துடன் முடிவடையும்
பாடசாலை நேரமும்
அத்தனை அழகானவை
அப்பள்ளி நாட்களில்...



-வளர்கவி க.யுவக்ஷனா
தாழையூர்.

இட்டு நிரப்புதல்

இறுக்கி மூடி
இருட்டடிப்புச் செய்யப்பட்ட
குளிர்பானப் போத்தலை
குதூகலமாக
வாங்கிக் குடிக்கும்
கூர் மங்கிப் போன
மனிதர்கள்
வெறுமையுடன்
பட்டிக்கு வருகிறார்கள்
தலை குனிந்து, முலை திறந்து
தயாராக நிற்கிறது வெள்ளைப்பசு
தாவிக் குதிக்கிறது
கன்றுக்குட்டி
எங்கோ இருப்பவன்
சுரண்டிக் கொள்ளும் வேதனத்தை
காபன் நிரப்பிய காற்றிடை வெளியை
இட்டு நிரப்பச்
சொல்கிறார்கள்
விவசாயிகளிடம்.



–இரவிகாந்தன்
திருகோணமலை.

குலவிளக்கு

விளக்கம் கூற தெரியாதவள் என்பதால் – அவளை
விளங்கி கொள்ளவும் – இங்கு யாருமில்லை

கல்லை கொண்டு அடித்தனர்
அவள் பெரும் கடலாய் மாறிப்போனாள்

சொல்லைக் கொண்டு அடித்தனர் – அவள்
சொற் களஞ்சியமாகவே மாறிவிட்டாள்



கழித்து நிதமும் நடந்த போதும் – அவள்
கள்ளம் இல்லா நெஞ்சுடன் கட்டியணைத்து
ரசித்துக்கொண்டாள்

விசுவாசம் கொள்ளத்தெரிந்த போதும் – அவளுக்கு
விழுந்த இடத்தில் இருந்து மீள தெரியவில்லை

வன்மையான வார்த்தையால் – அவளை கடிந்த போதும்
அவர்களை வரவேற்க ஒருபோதும் – அவள் தவறவில்லை

இத்தனைக்குப் பிறகும்
குடும்ப பொறுப்பு தெரிந்த பெண் என்பதால்
இன்றும் குலவிளக்காய் மட்டும் ஜொலிக்கிறாள்.

–மருதமூர் ஜிதர்சினி.

அறிமுகமில்லாப் பயணம்

பகலவன் சுட்டெரிக்கும் பாதிப் பகல்,
இயல்பான இராப்பொழுது வரும்முன்
முகவரி அறிந்த நீ
அறிந்திடாத ஒரு பயணம் – நான்

நீண்டு செல்லும் தனிப்பாதை
வானத்தை முட்டும்
வனாந்தர விருட்சங்கள்

தெருவோரத் தீண்டல்கள்
வழியெங்கும் புதுமுகங்கள்
ஆறாத காயங்கள் – எல்லாம்
காணாமல் மறைந்தன, சில பொழுதில்...

ஒவ்வொரு பயணங்களிலும்
பல்வேறு முகத்தோற்றங்கள்
உணர்விற்கு மத்தியில்
நினைவொன்றே கனமாகிறது

தேடுவதற்கு எதுவுமில்லாத
அக்கணத்தில் ஆரம்பிக்கிறது
அறிமுகமில்லாத பயணம்...



-வளர்கவி
வாழையூர் அபி.

சேமிப்பு

கோயில் திருவிழாவில்
விற்கப்படாத மிட்டாய்கள்
வீட்டுப்பானையில் நிரம்பி வழிய
அம்மாக்கு குளிர்த்தி பூச்சி விரட்டும் வேலை கூடியது.

அம்மா வாங்கோ
ஐயா வாங்கோ
அக்கா வாங்கோ
என்றெல்லாம்
கூப்பிட்டு விற்கப்பட்ட அப்பாவின் குரல்
விழித்திருந்த நித்திரையுடன்
நாளைக்கு தயாராக



நானும் தம்பிகளும்
ஆசைக்கு உண்டு பார்க்க
முந்தானை பிடித்து
தொங்கிக் கிடக்கின்றோம்.

இனிப்பு தின்றால் பல் குத்தும்
என்று
வருமானம் காக்கின்றாள்
அம்மா
சோற்றுக் கோப்பையை நீட்டியபடி.

-வி.அபிவர்ணா
முல்லைத்தீவு.

அக்கினிச் சிறகில்



உடன்கட்டை நெருப்பினில்
தன் சிறகுகளைக் கருக விடாது
அடைகாத்த குஞ்சுகளுக்காய்
அன்னப் பறவையொன்று
அகலப் பறக்க ஆயத்தமாகிறது

தாலி கழன்ற பெண்களெல்லாம்
மூலையோர முடுக்கினில்
நீரோட நத்தையாய்ச் சுருண்டு
கிடந்தென்ன பயன்?

விதவைக் கோலமென்னும்
உதவாத பழங்கதைகள்
கதவில்லாச் சிறையாகி
வதைகளைத் தந்திடும்

விதவைகள் நமக்கு
சிறகுத் திரிகள் இருக்கு
அக்கினியைக் கொழுத்தி
உச்சத்தினைத் தொடுவோம்.

–தமிழூராள் அனுஷ்திக்கா.

இயற்கையைப் பாதுகாப்போம்

மனித குலத்தின் மாட்சிக்காய்
இன்றளவும் எம்மோடு
இணைந்தே இருக்கின்றாள்
நமது இயற்கைத் தாய்

தாங்கிடும் நிலமாய்
அசைந்திடும் மரமாய்
எழில்கொண்ட வனமாய்
மயக்கிடும் மலையாய்
அசைகின்ற கடலாய்
திசைசொல்லும் சுடராய்
எங்கும் எதிலும்
இயற்கையே படர்ந்துள்ளாள்



அந்த ஒப்பில்லாத் தாயினை
காத்திடல் வேண்டும்
அதனைச் சீண்டினால் – யாவரும்
மாண்டிடல் வேண்டும்

சுவாசமும் வாசமும்
தருகின்ற இயற்கையை
அழிக்காமல் நேசித்து
அணைத்திடல் வேண்டும்

பயன்கள் முழுவதின்
பிறப்பிடம் இயற்கை
மானிடர் சுயநலம்
சுரண்டுதே வளத்தை
காலத்தின் விந்தையை
ஞாலத்தில் காத்திட
இயற்கையைப் பேணி
செழிப்பினைப் பெறுவோம்.

–பிள்ளைக்கவி பிரசாந்
கிண்ணையூர்.

நினைந்திட மறந்த இதயங்கள்

தாய்மடி
சுமந்திட
மறந்து போன
சின்னச் சின்ன
சந்தோசங்களை எல்லாம்
தாய்மடியாகச்
சுமந்து
கொள்கின்ற
கைகளைப் பார்க்க
எங்கிருந்தோ
இதயத்தில்
சில பிளவுகள்
இன்னும் அதிகமாகக்
கண்ணீர்த் துளிகள்
வெந்து போய்
நொந்த உடலில்லை
வெகுநாளாய்
எதுவும் உண்ணாமலும்
இல்லை
இருந்தும்
உலகமெனும்
பொதுவரங்கில்
உணர்வுகளைக்
கொன்று விட்டு
உடலுக்கு
உயிர் கொடுக்க
உறவோடு
ஏந்தும் கைகளும்
பைகளும்தான்
இங்கு
ஏராளம்...ஏராளம்...

✶✶✶



-இரா.நிதன்
மட்டக்களப்பு.

கோகிலா சிவராமன் கவிதைகள்

சாளரம்

என் வீட்டு கதவிற்காகத்
தென்னை ஓலையால்
நான் பிண்ணிய தட்டியும்
உன்னால் இன்று
ஈர்க்குகளாய் மாறி
சாளரமாய் நிற்கின்றது..
இங்கே
உனது திறமையும்
அழகு தான் கறையானே...

★★★

கொக்குகள்...

மரங்களுக்கு இடையில்
ஏதும் போர்
சூழப்போகிறதோ?
வெள்ளைக்கொடி
வேந்தர்கள்
அணிவகுத்து நிற்கின்றனரே...

★★★

தோல்வி...

சிலநேரங்களில்
மனதிற்கு
அறுதல் கூறமுடியாமல்
மொழியும்
இங்கே
தோற்றுத்தான் போகின்றது..

★★★

வழிகள்

பேசா மடந்தையையும்
பேச வைத்துவிட்டது
உனது
மையல் விழிகள்...

★★★

கையெழுத்து



அவனது கையெழுத்தே
ஆயிரம் ஆயிரம்
கவிதைகளைப் பாடும் பொழுது
அவனுக்கென்று
ஒரு கவிதையை
நான் எங்கிருந்து பாடுவது...?

★★★

-கோகிலா சிவராமன்
தமிழ்நாடு.

மோதி மிதித்துவிடு பாப்பா

தீராத விளையாட்டிற்கும் தீர்மானம் வேண்டும்!
போராத காலமிது பொருளுணர்வாய் பாப்பா!
மாறாத அன்பென்றே மானம் தொலைப்பார்!
போராட்ட வாழ்விலே தள்ளிடுவார் பாப்பா!

சமூகத்துடன் பழகுவதில் சச்சரவே இல்லை!
சமீபத்தில் நெருங்கிடுவார் சத்தமின்றியே பாப்பா!
கண்காணிக்கும் கருவிகளோடே கண்ணுக்கு எட்டாது
கண்ணறியாத கள்வருண்டு கவனமோடிரு பாப்பா!

விழுதான பெற்றோரின் வார்த்தைகள் கேட்டிடு!
முழுதுமாய்க் கனிந்த மூத்தோரிடமும் அணுகிடு!
குழுவாக விளையாடினாலும் குணமறிந்தே நட்பாகு!
பழுதில்லாப் பாசமெனப் பக்கத்தில் அனுமதிக்காதே!

கல்வியுமே கட்டணமாகிய காலமிது பாப்பா!
கற்பதையும் முதலாக்கிக் காசுக்கே கேட்பார்!
கடிதென நினையாது கற்றிடு பாப்பா!
கல்வியின் அறத்தைக் காத்திடு பாப்பா!

வடிகட்டாத காட்சிகள் வரவேற்பறையில் உண்டு!
வன்முறையைக் காட்டும் வரம்பற்றவையும் உண்டு!
கருத்திற்கு ஒவ்வாததைக் காற்றோடு விட்டு
கனிவற்ற அறமற்றவரை மோதி மிதித்துவிடு பாப்பா!



-மாலதி இராமலிங்கம்
புதுச்சேரி.

சுயம்

என்னைவிட என்னை
யார் நேசிக்கப் போகிறார்கள்?
என்னைவிட என்னை
யார் ஆதரிக்கப் போகிறார்கள்?
என்னைவிட என்னை
யார் மன்னிக்கப் போகிறார்கள்?
என்னைவிட என்னை
யார் இரசிக்கப் போகிறார்கள்?
என்னைவிட என்னை
யார் அழகுபடுத்தப் போகிறார்கள்?
என்னைவிட என்னை
யார் மகிழ்விக்கப் போகிறார்கள்?
என்னைவிட என்னை
யார் சகித்துக்கொள்ளப் போகிறார்கள்?
என்னைவிட என்னை
யார் புரிந்துகொள்ளப் போகிறார்கள்?
என்னைவிட என்னை
யார் தோற்கடிக்கப் போகிறார்கள்?
என்னைவிட என்னை
யார் காயப்படுத்த போகிறார்கள்?
எல்லாம் தெரிந்த என்னிடம்
நானே சொல்லிக் கொள்கிறேன்
என்னைவிட எனக்கு
எல்லாம் இரண்டாம் பட்சம்தான் என்று...



-இ.சோபிகா
வவுனியா.

அன்னை

தாலாட்டின் இசையமைப்பாளர்
அவள் குரலில் பாடகர்
“கண்ணுமணி...செல்லப்பட்டு” என்று
கவிஞராய் எம்மில்
பல கவிகளை வர்ணிப்பவள்

உதிரத்தை உயிராக்கி எம்மை
சிலையாக்கிய சிற்பியவள்
சிலைக்கும் வரம் கொடுத்து
கண்ணாக்கிய கடவுளவள்

என் உயிரின் பாதி அவளே...
என் உறவின் மீதியும் அவளே...

வலிக்கும் போதெல்லாம்
“அம்மா” என்றழைத்தால்
நினைக்கும் போதெல்லாம்
வலிக்கிறதே...



-ஷாய் டிலக்ஷி
சுங்கான்கேணி.

அகல்விழி மருட்சி

மடல்விழித் தூரிகை
மாவடுக் கண்வழி
கடன்பட்ட வறியரன்ன
கவினிடை நுசுப்பும்
குடமேந்தும் தளிர்மேனி
குகைசிற்பம் நிகர்க்க
தடம்பதித்த மண்மிசை
தாழைமணம் ததும்ப

அதரத்தின் ஈரத்தில்
அளியினங்கள் சூழ
சிதறிட்டச் சொற்களில்
சிந்திடும் மகரந்தம்
விடுகணை விரியிமை
வெகுளும் வாட்கண்
மடுவிடைக் கால்வாய்
மணந்திடும் சுகந்தம்

வனப்புடை சிருங்காரம்
வார்த்திட்ட சிற்பமாய்
தினவுதரும் உணர்விடை
தீயனைய உன்மத்தம்
வெந்துயர் வாட்டிடும்
வெந்தழல் விரகத்தில்
செந்திலகம் கலைந்திட
சிவக்கும் சுடரிரண்டு

பளபளக்கும் பருவத்தாள்
பவளயித முருவத்தாள்
உளமமர்ந்த சிற்பத்தால்
ஓங்கிடும் காய்ச்சல்
மஞ்சுபயில் ககனத்தில்
மழைதரும் முகிலாக
அஞ்சிவிலகும் மானாக
அகல்விழி மருட்சியில்


தடாகமுறைக் கெண்டை
தாழ்ச்சிகை மஞ்ஞை
விடாதுன்னை அண்டை
வெண்பிஞ்சுத் தண்டை
நொடியொன்று யுகமாக
நோன்தாள் நாயகன்
துடித்திட்டான் கயலாக
துடுப்பகன்றப் படகாக.

★★★



-வேங்கை மார்பன்
தமிழ்நாடு.

என்னைக் காதலிக்கும் உங்களுக்காக...



என்னை முழுவதுமாகக் காதலிக்காதீர்கள்
காணாமல் போய் விடுவீர்கள்...

என்னைக் காதலிப்பதாயின்
என் கோபங்களையும் சேர்த்தே காதலியுங்கள்...

மீண்டுமாய் என்னைக் காதலிப்பதாயின்
என் ஆணவங்களையும் சேர்த்தே காதலியுங்கள்...

இதன் பின்னும் காதலிப்பதாயின்
என் இறுக்கக் குணங்களையும் ஆராய்ந்து காதலியுங்கள்...

இத்தனைக்குப் பின்னும் என்னை காதலிப்பதாயின்
என் தளர்வுகளையும் காதலியுங்கள்...

அத்தனைக்குப் பின்னும் காதல் என் மீது இருந்தால்
என்னுள்ளும் இருக்கும் காதலையும்
சேர்த்தே காதலித்து விடுங்கள்....

நேசங்கள் என்பது யாவற்றிற்கும்
நேர்மறையானது தானே...

நேரமிருந்தால் என்னையும் சற்றே காதலித்து
கடந்து செல்லுங்கள்...

-சிவமதுரா நித்தியானந்தம்
உடுவில், யாழ்ப்பாணம்.

இரும்பு மனசு

குடும்பமாக வாழ வேண்டிய வயதினில்
குடும்பத்திற்காக வாழ்க்கையை தொலைக்கின்றாய்

இரும்பு மனிதனாய் அனைத்தையும்
உன் இதயத்தினுள் சுமக்கிறாய்

நாடி, நரம்பெல்லாம் வலுவிழந்த போதிலும்
உழைப்பதை நிறுத்தவில்லை

வியர்வையைச் சிந்திய போதிலும்
விடாமல் இழுக்கிறான் தன் குடும்பத்தை

ஆணாகப் பிறந்த பாவமோ
அலைந்து திரிகிறான் அகிலமெல்லாம்

மாறாமல் இவனின் வாழ்க்கையும்
விடாமல் தொடர்ந்து செல்கிறதே.



-மறத்தமிழன் கலை
முறையூர்.

சதுரங்க வாழ்வு

அதிகாரம் இருப்பவர்கள்
ஆளுமை செய்கிறர்
அயராது உழைப்பவர்கள்
அடிமாடாய்ப் போகிறர்...!

மந்திர மானவொரு
மகுடமதைச் சூடியே
தந்திரச் செயலெங்கும்
தாறுமாறாய் நடக்குது...!

கணுக்களாகச் சோதனைகள்
கண்டபடி வந்திடும்
நுணுக்கங்கள் அறிந்திட்டால்
நூதனமாய் வெல்லலாம்...!

செகத்தினில் வாழ்வது
சதுரங்கம் போன்றதே
அகத்தினில் தெளிவுடன்
அன்றாடம் இருந்திடு...!

நல்லவர் தீயவர்
நாட்டவர் ஆயினும்
வெல்வது என்றிட்டால்
வேதனை பாராதே...!

-க.இரவிச்சந்திரன்
தமிழ்நாடு.



கவிதை

என் எழுதுகோல் நடத்திய
பிரசவம் என் கவிதை.

வார்த்தைகளின் ஆடை களைந்து
நான் பார்க்கும் மொழி
கவிதை

குழந்தைகளின் பாதயாத்திரையாய்
என் எண்ணத்தில் தினந்தோறும்
கவிதை

கவிதையும் காகிதமும் என்
நிழலின் நிஜங்களாய்.

என் வரிகளில் எந்தன் வாழ்க்கை
எழுத்துப்பிழைகள் இல்லா அகராதியாய்.

-ரா.பிரேம் சுரேஷ்
கோத்தகிரி.

உயிர்த்துளி காத்திடும் உத்தமர்

ஆதவனின் அனலுடன் தினம்தினம் பேசி
அயராமல் ஆர்வம்கொண்டு வேலைதனைச் செய்து
அஸ்தமன வேளையில் வீடுவந்து சேர்கையிலே
“அப்பா...!” என்றொரு குரல் கேட்கையில்
தன் உடல் களைப்பையே மறந்து
“மகளே...!” என அள்ளி அணைத்திடும்
மகத்தான உறவே!

கண்டிப்பிலும் தண்டிப்பிலும் கலப்படமில்லாப் பாசத்தை
மிகையாக ஊட்டிடும் உத்தமரும் நீர் தானே!
பேசிடா மௌனத்தில் மனதாரப் பேசிப்
களித்திடும் கடவுளும் நீர் தானே!

குழந்தையாய் இருந்து குமரியானாலும்
எந்தையே!
என்றும் மனதிற்கு இனிய
மகளாய் ஏற்கும் மகத்துவர் நீர் தானே!

தன் வலி மறைத்து என் விழி தூங்கவைத்து
கைவிரல் பிடித்து காசினியில் வழிகாட்டி
தோளிடம் கொடுக்கும் தோழனாக மாறி
என் மகிழ்ச்சிக்காய் தன் உடல் வருத்தி
உழைத்திடும் உத்தமரும் நீர் தானே!

தந்தையர் தினம் என்ற நாளொன்று போதாதே
உம்புகழ் பாடத்தானே

உயிர்த்துளி ஆனவனே
உயிர் காக்கும் நாதனே
தோளில் எனைச் சுமந்த உம்மை
வயிற்றில் நான் சுமக்க
இறைவனை இறைஞ்சுகின்றேனே.



-கிண்ணையூர்
தமிழாதினி கிந்துயா.

அழகிய தமிழே.....!



எத்தனை மொழியிலும் எந்தன் மொழிபோல்
சித்திர மொழியும் சிறப்புறு மொழியும்
வித்தகனாக்கி உயர்த்திடும் மொழியும்
பித்தன் கூடப் பிதற்றிடும் போதும்
அழகூறும் மொழியும் அவனியில் ஏது...?

கற்றவர் மற்றவர் பாமரர் யாவரும்
எப்படிப் பேசினும் இனிமை கூட்டிடும்
திக்குகள் எட்டும் திசைப்படி பேசிடும்
பிரதேச வழக்கும் பிரகாசமாக ஒலிக்கும்
எழுத்து வழக்கோ எப்போதும் இனிக்கும்

சங்கம் வைத்தே சலனம் இன்றி
வளர்த்த தமிழோ சங்கத் தமிழாம்
இயலோடு இசையும் நாடகத் தமிழும்
முத்தமிழ் வகையாம் மூத்த மொழியாம்



கோபத்தில் திட்டினும் கோடிட்டு நிற்கும்
செல்லமாய்க் கொஞ்சினும் தேனாகப் பாயும்
எத்தகை உணர்வின் வெளிப்பாடு வரினும்
மொத்த அழகும் குறைவின்றித் தருமே

தேவதை வர்ணிப்போ தேசத்தன் பாடலோ
பாசத்தின் பங்கோ பாசாங்கைச் சொல்வதோ
வீசிடும் வாள்போல் பேசிடும் வார்த்தையும்
வீரத்தை வெகுவாய் வர்ணித்தும் கொள்ளும்

இலக்கிய மாயினும் இயைபாய்ச் சொல்லும்
இறைவனைப் பாடினும் இசைந்தே பாடும்
வருமொழி எதுவாய் வந்திடும் போதும்
உயிரின் மொழியாய் உயர்ந்தே நிற்கும்

ஆதி மொழியாம் அதிசய மொழியாம்
உயிரின் நாதம் ஒலிக்கும் மொழியாம்
மூச்சுப் பயிற்சிக்கு உகந்த மொழியாம்
உறவை அழகாய் உரைக்கும் மொழியாம்

எங்கும் சிறந்தது எதிலும் உயர்ந்தது
துணிவைத் தருவது துன்பம் அழிப்பது
வீரம் நிறைந்தது வீழ்த்தி வென்றது
அளப்பெரும் மொழியாம் அழகிய தமிழே....!

-திருமதி பிரிந்தா புஷ்பாகரன்
களுவாஞ்சிகுடி-09.



-தமிழ்மொழி வாழ்த்து-

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழிய வே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழிய வே!

எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழிய வே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையக மே!

தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நா டே!

வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழி யே!

~சுப்பிரமணிய பாரதியார்.



விபுலானந்தர் கலை இலக்கிய மன்றம்
பேத்தாழை

ISSN 3021-6680 Kavi Mulari Magazine

9773021668009

KaviMulari KaviMulari KaviMulari KaviMulari KaviMulari KaviMulari KaviMulari KaviMulari KaviMulari